நான் சேகரித்து பதில் அளித்துக் கொண்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரப்பர் போர்டுக்கு நிலம் கொடுப்பதுபற்றித் தெரிவிக்கிறார்கள். அதற்கு தனியாக கேள்வி போட்டால், அதற்கான தகவலைச் சேகரித்துத் தரமுடியும். ரப்பர் போர்டுக்கு நிலம் கொடுப்பதென்றால், அவர்கள் காட்டுக்குள்ளே கேட்பார்கள். இப்போது கொடுக்கப்பட்ட நிலங்கள் எல்லாம் காட்டு நிலங்கள் என்று சொல்வதாக இருந்தாலும், அவைகள் மரங்கள் இல்லாத, பொட்டல் நிலங்களைத் தான் தந்திருக்கிறோம். ஆகவே, காட்டுக்குள்ளே நிலம் வழங்குவது என்பது வேறு; மரங்கள் அல்லாத பொட்டல் நிலங்களை வழங்குவது என்பது வேறு.

திரு. பெ. திருமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வடக்குப் பகுதியில் 50 குடியிருப்புகள் உள்ளது. அந்தப் பகுதியிலே வசிக்கும் இடத்திற்கும், பாரஸ்ட் இடத்திற்கும் இரண்டு தெருக்கள தான் இருக்கின்றன. அதனால், பாரஸ்ட் இலாகாவினருக்கும் இந்தக் குடியிருப்பு மக்களுக்கும் அடிக்கடி தகராறு ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் நேரில் வந்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதை அனுமதிக்க முடியாது.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும் போது கொடுக்கப்பட்ட நிலங்கள் மரங்கள் இல்லாத. வனத் துறைக்குச் சொந்தமான பொட்டல் நிலங்கள் என்று சொன்னார்கள். அதேமாதிரியாக எந்தவிதமான மரங்களும் வளர்வதற்கு லாயக்கில்லாத, வன இலாகாவைச் சேர்ந்த நிலங்களில் பலஇடங்களில் பல்லாண்டுகளாக அரிசன மக்கள் வீடுகளும், குடிசைகளும் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த இடங்களை புறம்போக்கு நிலங்களாக மாற்றி, அவர்களுக்கு வீட்டு மனைப்பட்டா கொடுக்கப்படுமா? கோவில்பட்டியிலே லிங்கப்பட்டி பஞ்சாயத்திலே, இன்னும் இதைப்போன்ற இடங்களில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இதை அனுமதிப்பதற்கில்லை.

டூரிங் சினிமா பகல் காட்சிகளுக்கு அனுமதி வழங்குதல்

* வினா எண். — 466 திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள எல்லா டூரிங் சினிமா கொட்டகைகளுக்கு பகல் காட்சி சினிமா நடத்த அனுமதி வழங்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த திட்டம் உடன் நடைமுறை படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ): டூரிங் திரை அரங்குகளில் பகல் காட்சிக்கு அனுமதி வழங்கக்கோரி அரசுக்கு வேண்டுகோள் வந்துள்ளது. அதன் மீது அரசு எந்த முடிவையும் எடுக்கவில்லை.

திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்த டூரிங் சினிமா கொட்டகை தென்னங் கீற்றுக் கொட்டகையாக இருந்தது. அதை மாற்றி லைட் ரூபிங் ஷீட் போட்டதால் பல லட்சக்கணக் ான பணம் செலவாகின்றது. அதைச் சரிக்கட்டுகின்ற வகையில், அந்தக் கிராமத்திலுள்ள இந்த டூரிங் சினிமா கொட்டகையில் பகல் காட்சி நடத்துவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி அரசு ஆணையிட்டு, அமைக்கப்படுகின்ற டூரிங் திரையரங்குகளுக்கு அதிகமான முதலீடுகள் செய்யப்படுகின்றது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்- அந்த அடிப்படையிலே தான், அதற்கான உரிமத்தை 3 ஆண்டுகள் என்றிருந்ததை, 5 ஆண்டுகள் என்று நீட்டித்து தந்திருக்கிறோம். சுலபத்திலே தீப்பிடித்துக் கொள்ளும் வாய்ப்பு கீத்துக் கொட்டகைகளிலே இருக்கின்ற காரணத்தினால் அதிலும பகல் காட்சி நேரத்திலே எளிதில் தீப்பிடித்துக்கொண்டு விடுகிறது என்ற அறிவுரையை ஒரு நபர் கமிஷன் விசாரணையிலிருந்து அவர்களால் அரசுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது சுலபத்தில் தீப்பிடிக்காத வகையில் அரங்குகள் அமைக்கப்படுகின்ற காரணத்தினால், பகல் காட்சிகள் நடத்த அனுமதி கேட்கிறார்கள். அப்படி அனுமதிக்கிறபோது வேறு பல பிரச்னைகள் வருகின்றன. மக்களுக்கு தேவையான காற்றோட்ட வசதிகள், மற்ற வசதிகள் அந்த அரங்கத்திலே அமைத்து தருவார்களா என்பதை அறிய வேண்டும். பகல் காட்சி அனுமதிக்கப்படுகிற போது ஒட்டுமொத்தகேளிக்கை வரிமுறையை மாற்றியமைக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. வணிக வரித் துறையிடத்திலே பரிசீலிக்கச் சொல்லியிருக்கிறோம். அந்த கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலித்ததற்குப் பிறகு தான் அரசு இதிலே முடிவை தெரிவிக்க இயலும்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சினிமாக் கொட்டகைகளின் உரிமம் மூன்று ஆண்டாக இருந்தது, ஐந்து ஆண்டாக மாற்றப்பட்டு பல சலுகைகள் எல்லாம் தரப்படுகின்றன. ஆனால் தமிழக அரசு செய்திப் படங்களை பல கொட்டகைகள் போடுவதில்லை. அப்படி போடாத கொட்டகைளை சோதனை செய்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பகல் சினிமாக் காட்சி வைத்துக் கொள்ளலாமா. கூடாதா என்பது கேள்வி அதைப்பற்றித் தான் துணைக் கேள்விகள் அனுமதிக்க முடியும்.

1982 மார்ச் 18]

திரு. க. இரா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாலை நேரக் காட்சி, பகல் 10 மணி காட்சி என்று சினிமாக் கொட்டகைகளுக்கு அனுமதி கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் நலனைக்கருதி, காலையிலே பள்ளிக்கூடம்செல்லாமல் 10 மணி காட்சிக்கு அவர்கள் சென்றுவிடுகிற நிலை இருப்பதால் 10 மணி காட்சி காட்டுவதை அரசு ரத்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகல் காட்சி காட்ட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்வி கேட்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அதற்கு மாறாக அனுமதிக்கப்பட்டிருக்கிற காட்சியை ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். கெட்டுப் போகிற மாணவர்கள் பகல் காட்சி நடத்தினாலும், நடத்தா விட்டாலும் கெட்டுப் போவார்கள். காட்சி நடத்துவதாலே மாணவர்கள் கெட்டுப் போவார்கள் என்கிற வாதம் ஏற்றுக் கொள்வதற்கில்லை.

வெள்ளைப்பொன்னி நெல் விதை வழங்கும் செயற்குறிப்பு.

*வினா எண் 535—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்தில் விவசாயிகளுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வழங்கப்படுகிறதா?

(ஆ) இல்லை எனில் அரசு வழங்க முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தமிழகத்தில் விவசாயி களுக்கு வெள்ளைப் பொன்னி நெல்விதை வேளாண்மைத்துறை யால் தற்போது வழங்கப்படவில்லை.

(ஆ) வெள்ளைப் பொன்னி நெல் விதைகளை விவசாயி களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளைப் பொன்னி மிக சிறந்த நெல் என்று சொல்கிறார்கள். மாநில வேளாண்மைத் துறையின் மூலமாக நாம் கொடுத்து வருகிற விதை நெல்லைப் போல 50 சதவீதம் கூடுதலாக விளைச்சல் தருகிறது என்றும், அந்த நெல்லுக்கு நோயே வருவதில்லை என்றும்சொல்கிறார்கள். சிங்கப்பூரிலேயிருந்து அந்த நெல்லை கடத்தி வந்து திருச்சி பகுதியிலே பயிரிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும்கூட இரண்டு போகத்திற்கு பிறகு வீரியம் இல்லாமல் போய்விடுகிறது. உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவி செய்கிற இந்த நெல்லை வேளாண்மைத்துறையிலே புகுத்தி விவசாயிகளுக்குக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா எனபதை அறிய விரும்புகிறேன்.